# நிர்மலா ராகவன்- ஆறுமோ மனம்
# Nirmala Ragaven: Arumō Manam

முனைவர் உமா அழகிரி
Dr Uma Allaghery

" "TAM 2001 Y (3) 7.4 Nirmala Ragaven: Arumo Manam(PPT) " by Dr Uma Allaghery(2024), Mahatma Gandhi Institute is licensed under CC BY 4.0

# நிர்மலா ராகவன் – சிறு குறிப்பு

இவர் மலேசியா நாட்டைச் சேர்ந்தவர்.

இவர் ஒரு பௌதீக ஆசிரியராக விளங்கினார்.

இவரது படைப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைந்திருக்கின்றன.

இவர் சிறுகதைகள், கவிதைகள், வானொலி நாடகங்கள் ஆகியவற்றைப் படைத்தார்.

இவர் சமூகப் பணிகளில் ஈடுபட்டவர்.

இவர் தேசிய அளவில் பல பரிசுகளைப் பெற்றவர் ஆவார்.

# ஆறுமோ மனம்- கதையில் இடம்பெறும் பாத்திரங்கள்

பிரபா- மாணவி- பள்ளியில் விளையாட்டில் ஆர்வம் காட்டினாள்- படிப்புக்குப் பின் தையல் தொழில் செய்தாள்.

சீதா - பிரபாவின் அம்மா- பள்ளி ஆசிரியர்- பணியில் ஓய்வு பெற்ற பிறகு பக்கவாதத்தால் படுக்கையில் கிடந்தார்.

மோகன்- விளையாட்டு வீரன் – பள்ளி ஆசிரியர்; பணியில் விலகி ஆஸ்திரேலியாவுக்குப் போய் மேல்படிப்பு தொடர்ந்தார். ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு கல்லூரியில் இணைப் பேராசிரியராகப் பணி ஆற்றினார்.

மிஸ். ராஜசிங்கம் – பள்ளித் தலைமை ஆசிரியை

# ஆறுமோ மனம் என்னும் சிறுகதையில் உள்ள செய்திகள்

பிரபா விளையாட்டில் அக்கறை காட்டினாள்.

விளையாட்டுப் பயிற்சிகளால் மோகனுடன் பழக வாய்ப்பு கிடைத்தது.

அவள் மோகன்மீது காதல் கொண்டாள்.

இது ஒருதலை காதல் எனலாம்.

அவள் மோகனுக்கு ஒரு காதல் கடிதம் எழுதினாள்.

மோகனோ, “இதை நான் பெரிசு படுத்தப் போறதில்ல. இன்னும் இரண்டு வருஷம் போனா, நீ இப்பச் செய்திருக்கிற காரியம் எவ்வளவு பைத்தியக்காரத் தனமானதுன்னு ஒனக்கே புரியும்,” என்று அமைதியான குரலில் பிரபாவிடம் சொன்னான்.

இதனால் பிரபாவுக்கு அவமானம் ஏற்பட்டது.

# ஆறுமோ மனம் என்னும் சிறுகதையில் உள்ள செய்திகள்

பிரபாவின் தாய்க்கு உடம்பு முடியாமல் இருந்தது.

பிரபாதான் அவருக்குப் பணிவிடையெல்லாம் செய்கிறாள்.

ஆனால், தாய்க்கும் மகளுக்கும் ஒரு நெருக்கமும் பிணைப்பும் இல்லை.

அவளது தாய் திருமணம் ஆகாமலேயே பிரபா பிறந்தாள்.

இதற்குப் பிறகு சீதா திருமணம் செய்தாள். ஆனால், திருமண வாழ்க்கை சரியாக அமையவில்லை.

இரு ஆண்டுகளுக்குள்ளேயே திருமண முறிவு ஏற்பட்டது.

# ஆறுமோ மனம் என்னும் சிறுகதையில் உள்ள செய்திகள்

பிரபா மோகன்மீது பொய்யான குற்றம் சாத்தினாள்.

அவன் தகாத முறையில் நடந்துகொண்டான் என்று தலைமை ஆசிரியை ராஜசிங்கத்திடம் முறையிட்டாள்.

புகாரின் அடிப்படையில் தலைமை ஆசிரியை பிரபாவையும் மோகனையும் கூப்பிட்டுப் பேசினார்.

பிரபா கீழே விழுந்தாள். மோகன் அவளுக்கு அவசரச் சிகிச்சை கொடுத்தான். இது அவனுக்கு ஒரு தண்டனையா? ஏனென்றால் நடந்ததையெல்லாம் கூறாமல் பிரபா வேறு ஒன்றைச் சொல்லி அவன்மீது பழி சுமத்துகிறாள். மோகன்தான் தன் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்தால் இவ்வாறு செய்துள்ளாள்.

மோகன் எதுவுமே செய்யவில்லை எனக் கூற முயன்றபோது, தலைமை ஆசிரியர் அவனைப் பேச நேரம் கொடுக்கவில்லை.

# ஆறுமோ மனம் என்னும் சிறுகதையில் உள்ள செய்திகள்

அதனால், மோகன், மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டான்.

இந்த வேலையை விட்டுப்போவான் என மோகன் தலைமை ஆசிரியைக்கு எழுதிக்கொடுத்துப் பள்ளியிலிருந்து வெளியேறினான்.

அதற்குப் பிறகு பிரபாவுக்கு எதிலும் அக்கறையும் கவனமும் இல்லாமல் போய்விட்டது.

அம்மா கல்யாணப் பேச்சு எடுக்கும்போது அம்மாவின் வாயை அடைத்தாள். மோகன்மீது பழி சுமத்துவது ஆலோசனை கொடுத்தவர் அவளுடைய அம்மாதான்.

# ஆறுமோ மனம் என்னும் சிறுகதையில் உள்ள செய்திகள்

அம்மாதான் மோகன்மீது பழி சுமத்தச் சொன்னார்:

“மிஸ்டே மோகன் ஒன்னைக் கெடுக்கப்பாத் தாருன்னு சொல்லிடு,” என்ற யோசனை இப்போதுதான் சொல்வதுபோல் ஒலிக்க, அம்மாவின் அருகில் செல்லுவதையே தவிர்த்தாள் பிரபா.

அதனால், பிரபாவின் முகத்தில் கடுமை அல்லது வெறுமை இருந்தது.

‘ஒரு நல்ல மனிதரின்மேல் அபாண்டமான பழி சுமத்தி, அவருடைய எதிர்காலத்தையே நாசமாக்கி விட்டேனே’ என்று தன்மேலேயே வெறுப்பு எழுந்தது.

# ஆறுமோ மனம் என்னும் சிறுகதையில் உள்ள செய்திகள்

பிரபா தையல் தொழிலைச் செய்து கொண்டிருந்தாள். அவள் வாழ்வில் இயந்திர கதிதான் என்று நாள்தோறும் கனத்துப் போகும்போது வெறுமை.

திடீரென்று தெரிந்த ஒரு குரலைக் கேட்டாள்.

மோகன் அவளைப் பார்க்க வந்தான். அவன் ஆஸ்திரேலியாவில் ஒரு கல்லூரியில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தான்.

அவன்கூடவே ஒரு வெள்ளைக்காரன் வந்திருந்தான். அவர்கள் தம்பதியாக இருந்தார்கள்.

மோகன் பெண்மாதிரி காதில் சிறு வளையம் மாட்டியிருந்தான்; கையில் வளையல்; நீண்ட முடி ரப்பர் பேண்டால் கட்டப்பட்டிருந்தது.

வெள்ளைக்காரன் உரிமையோடு மோகன் இடுப்பைப் பிடித்து நடந்துபோனான்.

பிரபா அதிர்ச்சியுடன் மோகன் போன திசையையே பார்த்தாள்.

தன் தலையைத் தன் முன்னிருந்த இயந்திரத்தின் மேலே வைத்து அழுதாள்.

மோகன் வேறு எந்தப் பெண்ணாலும் மயக்க முடியாது. இது புரியாமல் அவனைப் பழி வாங்கவென்று பொய் சொன்னாள்; அப்போது தன் அம்மா சீதாவை இன்னும் அடியோடு வெறுத்தாள்.

# முடிவுரை

நிர்மலா ராகவன் இக்கதையில் புலப்படுத்திய கரு தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறாக இருந்தது.

தமிழ் மரபின் அடிப்படையில் ஆண்ணும் பெண்ணும் தம்பதிகளாக விளங்குவதைத் தமிழ்நாட்டுச் சிறுகதைகளில் பார்க்க முடிகிறது.

மலேசியா நாட்டைச் சேர்ந்த நிர்மலா உலகத்திலுள்ள ஓர் ஆண் இன்னொரு ஆணோடு உள்ள உறவினைப் பற்றி ‘ஆறுமோ மனம்’ என்னும் சிறுகதையில் பிரதிபலிக்கிறார்.

தற்காலத்தில் இத்தகைய உறவு ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஏற்றப்படுகிற ஒன்று.

# ஆறுமோ மனம் கதையிலுள்ள கருத்து

பொய் பேசக்கூடாது. பழி மற்றவர்மீது சுத்தக்கூடாது.

பிரபா வாழ்நாள் முழுதும் தான் சொன்ன பொய்யைப் பற்றி நினைத்து ஏற்பட்டுள்ள மனக்கலக்கத்தால் தவிக்கிறாள்.

மோகன் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று மேற்படிப்பு தொடர்ந்தான்.

தற்காலத்தில் இணைப்பேராசியராகப் பள்ளியில் பணி ஆற்றி வருகிறான். அவன் வாழ்க்கையில் முன்னேறினான்.

பிரபா தொடர்ந்து படிக்காமல் தற்போது தையல் தொழில் செய்து கொண்டிருந்தாள்.

பிரபாவின் அம்மா சீதாவுக்குப் பக்கவாதம் வந்ததால் படுக்கையில் கிடக்கிறார்.

இக்கதை மனித உறவு அடிப்படையில் உலகப் போக்கினைச் சுட்டிக்காட்டுகிறது.

ஒருதலை காதலால் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிணங்கைக் காட்டுகிறது.

சீதாவும் பிரபாவும் ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் அவர்களுடைய உறவில் ஓர் இடைவெளி இருக்கிறது.